அடையாள இலக்கம்

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2015

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## இளைஞர் பிரிவு

(15 – 17 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

## பகுதி 1

**அ) சரியான விடையின் கீழ்க் கோடிடுக. புள்ளிகள்: 10**

1) சோழ மன்னர்களின் கொடி எது?

அ) நந்திக் கொடி ஆ) புலிக் கொடி இ) மீன் கொடி ஈ) வீணைக் கொடி

2) ஒரு நூலுக்கு நூலாசிரியர் அல்லாத ஒருவர் நூலைப்பற்றி வழங்கும் முகவுரை?

அ) அணிந்துரை ஆ) பதிப்புரை இ) பொழிப்புரை ஈ) பதிலுரை

3) குயில் கூவும் என்பது போல, ஆந்தை ...............

அ) அகவும் ஆ) கதறும் இ) அலறும் ஈ) கத்தும்

4) இறந்த வீரரின் பெயரைப் பொறித்து நாட்டப்படும் கல்?

அ) வீரக்கல் ஆ) நடுகல் இ) சுடுகாட்டுக்கல் ஈ) இடுகாட்டுக்கல்

5) இராமாயணத்தில் வரும் பாத்திரம் ஒன்றின் பெயர் அல்லாதது?

அ) இராவணன் ஆ) குகன் இ) நகுலன் ஈ) திரிசடை

6) பின்வரும் பழமொழியை முடித்து வைக்கவும். **வல்லவனுக்குப்** _________

அ) கல்லும் ஆயுதம் ஆ) புல்லும் ஆயுதம்

இ) எல்லாம் ஆயுதம் ஈ) ஆயுதம் எதற்கு?

7) வசனக் கவிதையை முதலில் எழுதியவர்?

அ) மு. மேத்தா ஆ) பாரதி இ) வைரமுத்து ஈ) வாலி

8) அறுபதாவது ஆண்டில் செய்யப்படும் கொண்டாட்டத்தை (விழாவை) எப்படி அழைப்பர்?

அ) பவளவிழா ஆ) வைரவிழா இ) வெள்ளிவிழா ஈ) பொன்விழா

9) பின்வருவனவற்றில் வல்லின எழுத்து அல்லாதது எது?

அ) ட் ஆ) ச் இ) த் ஈ) ந்

10) பின்வருவனவற்றில் எது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாக அமையாதது?

அ) மணிமேகலை ஆ) இராமாயணம் இ) குண்டலகேசி ஈ) சிலப்பதிகாரம்

| புள்ளிகள் | |
|---|---|

**ஆ) கோடிட்ட இடத்தில் மிகவும் பொருத்தமான விடையை எழுதவும்.**
**புள்ளிகள்: 10**

1) குயில் கூவும் என்பது போல, யானை ____________________

2) மகாபாரதத்தைத் தமிழிலே முதலில் மொழிபெயர்த்து எழுதியவர்?

_______________________________________________

3) சூரியன் மறையும் (விழும்) திசை எது?

_______________________________________________

4) ‘தமிழுக்கு அமுதென்று பேர் - இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ என்ற வரிகளில் ஆரம்பிக்கும் பாடலை இயற்றியவர் (பாடியவர்) யார்?

_______________________________________________

5) ‘வசன நடை கைவந்த வல்லாளர்’ என்று போற்றப்படும் பெரியார் யார்?

_______________________________________________

6) சூரியன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக?

_______________________________________________

7) இளங்கோவடிகளால் எழுதப்பட்ட காப்பியத்தின் பெயர்?

_______________________________________________

8) இந்தியாவின் தேசபிதா என அழைக்கப்படுபவர் யார்?

_______________________________________________

9) புதிதாக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வை எவ்வாறு அழைக்கப்பார்கள்?

_______________________________________________

10) பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் ___________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

**இ) பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்களில் அமைக்குக.**

(20 புள்ளிகள்)

1. **கலை**

______________________________________________________________________

______________________________________________________________________

**களை** ______________________________________________________________

______________________________________________________________________

2. **வெல்லம்**

______________________________________________________________________

______________________________________________________________________

**வெள்ளம்**

______________________________________________________________________

______________________________________________________________________

3. **கிளி**

______________________________________________________________________

______________________________________________________________________

**கிழி**

______________________________________________________________________

______________________________________________________________________

4. **பழி** ______________________________________________________________

______________________________________________________________________

**பலி**______________________________________________________________

_

______________________________________________________________________

5. **வளி**_____________________________________________________________________

_____________________________________________________________________________

**வழி**_______________________________________________________________________

_____________________________________________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

**ஈ) கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதுக.**
(புள்ளிகள்: 5 × 2 = 10)

1) நான்கு திசைகளும் எவை?

_______________________________________________________________________

_______________________________________________________________________

2) வானவில்லில் உள்ள ஏழு நிறங்களும் எவை?

_______________________________________________________________________

_______________________________________________________________________

_______________________________________________________________________

3) தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்கள் எவை?

_______________________________________________________________________

4) ஐம்பொறிகள் என்று சொல்லப்படுபவை யாவை?

______________________________________________________________

______________________________________________________________

5) பண்டைய தமிழ் அரசர்கள் கொண்டிருந்த நால்வகைப் படைகளும் எவை?

______________________________________________________________

______________________________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

## பகுதி 2

**வினாக்களுக்குரிய விடைகளைக் கொடுக்கப்பட்ட தாள்களில் எழுதுக.**

**உ) கீழே தரப்பட்ட கவிதையை வாசித்தபின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களை எழுதவும்.**

(புள்ளிகள்: 5 × 5 = 25)

கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குற்றிக்
காட்சி கெடுத்திடலாமா?
பெண்களறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

பாருக்குள்ளே சமத் தன்மை – தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமைசெய் யாது – புவி
யெங்கும் விடுதலை செய்யும்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;

பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

<u>வினாக்கள்:</u>

1) பின்வரும் சொற்களுக்கான பொருள்களை எழுதுக.

வையம்: ……………………………….

பேதமை: ……………………………….

மானுடர்: ……………………………….

புவி: ……………………………….

விடுதலை: ……………………………….

2) முதலாவது கவிதையிலே கவிஞர் சொல்லவரும் செய்தி என்ன என்பதை நீர் புரிந்து கொண்ட வகையிலே எழுதுக?

……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

3) இரண்டாவது கவிதையில் கவிஞர் சொல்லவரும் செய்தி என்ன என்பதை நீர் புரிந்து கொண்ட வகையிலே எழுதுக?

……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

4) புவி எங்கும் விடுதலை கிடைப்பதற்கு எவை அவசியம் என்று கவிஞர் கூறுகின்றார்?

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

5) இந்தப் பாடல்களைப் படிக்கையில் உமது மனதில் எழும் உணர்ச்சிகள் எவை?

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

……………………………………………………………………………………..

| புள்ளிகள் | |
|---|---|

**ஊ) கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக்**

**குறையாத கட்டுரையையோ அல்லது கடிதத்தையோ வரைக.** (புள்ளிகள் - 25)

1) நீங்கள் கோடைகால விடுமுறைக்கு வெளிநாடு சென்று வந்திருக்கின்றீர்கள். சென்ற நாட்டில் உங்களைக் கவர்ந்த காட்சிகளை விளக்கி இந்தியா அல்லது இலங்கையில் வசிக்கும் உங்கள் ஒன்றுவிட்ட சகோதரனுக்கு 250 சொற்களுக்குக் குறையாது ஓர் கடிதம் வரைக.

**அல்லது**

2) எமது இயற்கைச் சூழலைப் பாதுகாக்க நாம் எடுக்கக் கூடிய வழிமுறைகளை விபரித்துச் சஞ்சிகை ஒன்றுக்கு 250 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக?

| புள்ளிகள் | |
|---|---|